(எட்டாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர் )

இல. 90.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2019 ஆகஸ்ட் 22 வியாழக்கிழமை, மு.ப. 10.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

54/ '18

கௌரவ ஹேஷா விதானகே,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அப்போதைய மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட 500 கிராமிய பாலங்கள் கருத்திட்டம் என்ற பெயரில் கருத்திட்டமொன்று தற்பொழுது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனின், இக்கருத்திட்டத்தின் நோக்கங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டத்திற்காக பதுளை மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்டுள்ள பாலங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iv) பதுளை மாவட்டத்தில் தற்சமயம் பழுதடைந்துள்ள ஏனைய பாலங்களை அபிவிருத்தி செய்வதற்கு அமைச்சிடம் உள்ள வேலைத்திட்டங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

95/ '18

கௌரவ தயாசிறி ஜயசேகர,— சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு.— (1)

(அ) (i) மத்திய அரசாங்கத்துக்கு சொந்தமான வைத்தியசாலைகளுக்கு ஒட்சிசன் வாயுவை வழங்கும் கம்பனிகள் யாவை;

(ii) இதற்காக மாதாந்தம் செலவிடப்படும் மொத்தப் பணத்தொகை யாது;

(iii) அக்கம்பனிகள் பற்றாக்குறையின்றி குறிப்பிட்ட சேவையினை வைத்தியசாலைகளுக்கு வழங்குகின்றனவா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மாகாண சபைகளுக்குச் சொந்தமான வைத்தியசாலைகளுக்கு ஒட்சிசன் வாயுவை வழங்கும் கம்பனிகள் யாவை;

(ii) மாகாண சபைகளுக்குச் சொந்தமான வைத்தியசாலைகளுக்கு ஒட்சிசன் வாயுவை வழங்குவதற்காக மாதாந்தம் செலவிடப்படும் மொத்தப் பணத்தொகை யாது;

(iii) இப்பணத் தொகை பொதுத் திறைசேரியினால் நேரடியாக மாகாணசபைக்கு வழங்கப்படுகின்றதா;

(iv) இதற்காக பொதுத் திறைசேரியினால் வருடாந்தம் ஒதுக்கீடு செய்யப்படும் பணத்தொகை யாது;

(v) இதற்காக மாகாண வைத்தியசாலைகளுக்கு வருடாந்தம் தேவைப்படும் பணத்தொகை யாது;

(vi) குறிப்பிட்ட பணத்தொகை உரிய காலப்பகுதியில் கிடைக்கப்பெற்றுள்ளதா;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3.

155/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) உமா ஓயா அபிவிருத்திக் கருத்திட்டம் காரணமாக வீடுகளுக்கும் தொழில்முயற்சி இடங்களுக்கும் சேதமேற்பட்டமையால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் கீழ் வருகின்ற விடயங்கள் சம்பந்தமாக நிவாரணங்களை வழங்குவதற்காக அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

222/ '18

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கை பொலிஸ் சேவையில் உப பொலிஸ் பரிசோதகர் பதவியில் தற்போதுள்ள உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) ஆட்சேர்ப்பு நடைமுறைகளுக்கேற்ப இவர்களுக்கு பொலிஸ் பரிசோதகர் பதவி வரையிலான பதவியுயர்வுகள் எவ்வளவு காலத்திற்குப் பின்னர் வழங்கப்பட வேண்டும் என்பதையும்;

(iii) இந்த உரிய காலத்தினை பூர்த்திசெய்துள்ள உப பொலிஸ் பரிசோதகர்களுக்கு பதவியுயர்வு வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

273/ '18

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டில் மொனராகலை மாவட்டத்தின் புத்தள பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள *'ராத்திரி'* வாவியை மறுசீரமைப்பதற்காக செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) அதற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட சுற்றாடல் மற்றும் பிற அங்கீகாரங்களை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iii) இக்கருத்திட்டத்திற்குரிய மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள மறுசீரமைப்புப் பணிகள் யாவையென்பதையும்;

(iv) சம்பந்தப்பட்ட மதிப்பீட்டின் முழுமையான அறிக்கையொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(v) மேற்படி மறுசீரமைப்பின்போது வாவியின் ஆழம் மற்றும் பரப்பளவை அதிகரிக்கச் செய்வதற்காக வாவியின் அடியில் மண் அடுக்குகள் அகற்றப்பட்டுள்ளதென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(vi) மேற்படி மண் அடுக்குகள் அகற்றப்பட்ட விதம் மற்றும் அவை அப்புறப்படுத்தப்பட்ட இடம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6.

361/ '18

கௌரவ வேலு குமார்,— அரச தொழில்முயற்சிகள், மலைநாட்டு மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான ஹந்தானை தோட்டத்தில் 2002 ஆம் ஆண்டில் தொழில் புரிந்த தோட்டத் தொழிலாளர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) 2000ஆம் ஆண்டு தொடக்கம் 2015ஆம் ஆண்டு வரை இத்தோட்டத்தில் தொழில் புரிந்து ஓய்வெடுக்கச் செய்யப்பட்ட ஆண் மற்றும் பெண் தோட்டத் தொழிலாளர்களின் எண்ணிக்கை தனித்தனியாக யாது என்பதையும்;

(iii) அவ்வாறு ஓய்வெடுக்கச் செய்யப்பட்ட தொழிலாளர்களில் இன்றளவில் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதி, ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஓய்வூதியப் பணிக்கொடை செலுத்தப்படாத தொழிலாளர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) அவ்வாறான தொழிலாளர் ஒவ்வொருவரினதும் பெயர், அங்கத்தவர் இலக்கம், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதி, ஊழியர் சேமலாப நிதி மற்றும் பணிக்கொடை ஊதியத்தின் நிலுவை தனித்தனியாக யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

7.

459/ '19

கௌரவ அசோக்க பிரியந்த,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) அண்மையில் கலைக்கப்பட்ட வடமேல் மாகாண முதலமைச்சரின் கீழ் உள்ள அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் ஏனைய நியதிச்சட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை எவ்வளவு;

(ii) மேற்படி ஒவ்வொரு நிறுவனத்தினதும் பெயர் மற்றும் முகவரி யாது;

(iii) நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் வடமேல் மாகாணசபையின் முதலமைச்சரின் கீழ் நிருவகிக்கப்பட்ட நிறுவனங்களுக்கு ஆட்சேர்க்கப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை எவ்வளவு;

(iv) ஆட்சேர்க்கப்பட்ட ஊழியர்களின் பெயர்கள் மற்றும் ஆட்சேர்க்கப்பட்ட பதவிகளை வெவ்வேறாக குறிப்பிடுவாரா:

(v) அவ்வாறு ஊழியர்களை ஆட்சேர்ப்பதற்கு மாகாணசபை பின்பற்றியுள்ள முறையியல் யாது;

என்பதை அவர் இச் சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

8.

580/ '19

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— பொது நிருவாக, அனர்த்த முகாமைத்துவ மற்றும் கால்நடை வளங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த தினங்களில் நிலவிய கடும் வறட்சி காரணமாக குருணாகல் மாவட்டத்தில் பாதிப்புக்குள்ளான குடும்பங்களின் எண்ணிக்கை யாது;

(ii) பாதிப்புக்குள்ளான இக்குடும்பங்கள் பற்றி அறிக்கையிடப்பட்ட பிரதேச செயலாளர் பிரிவுகள் வெவ்வேறாக யாவை;

(iii) வறட்சி காரணமாக பாதிப்புக்குள்ளான மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அமைச்சு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

9.

606/ '18

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— மின்வலு, எரிசக்தி மற்றும் தொழில்துறை அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலக்கம் 93/2, கண்டி வீதி, யக்கல எனும் முகவரியில் அமைந்துள்ள சிலோன் சோலார் பவர் தனியார் நிறுவனமானது இலங்கை புதுப்பிக்கத்தக்க வலு அதிகாரசபையில் பதிவு செய்யப்பட்டுள்ள ஒரு நிறுவனமா அல்லது கறை நிரலில் இடம்பெற்றுள்ள ஒரு நிறுவனமா என்பதையும்;

(ii) மேற்படி நிறுவனத்தின் பதிவானது இலங்கை புதுப்பிக்கத்தக்க வலு அதிகாரசபையினால் 2017.03.14 ஆம் திகதி இடைநிறுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) மேற்படி இடைநிறுத்தத்திற்கான காரணம், குறிப்பிட்ட கம்பனியினால் பொருத்தப்பட்ட சூரிய சக்தி உபகரணங்களின் தரம் குறைவாக இருந்தமையா அல்லது நிறுவனத்தின் உள்வாரியானதொரு காரணமா என்பதையும்;

(iv) மேற்படி நிறுவனத்தின் பதிவு இடைநிறுத்தப்பட்டிருக்குமானால் அது சம்பந்தமாக சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் அது தொடர்பில் அதிகாரசபை தலையிடுவதற்கான காரணம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பதிவு இடைநிறுத்தப்பட்டதன் விளைவாக அந்நிறுவனத்தில் நிரந்தர மற்றும் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றிய சுமார் 40 பேர் தொழில்களை இழந்துள்ளனர் என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி நிறுவனத்தின் பதிவானது தற்காலிகமாக இடைநிறுத்தப் பட்டிருக்குமானால் அது தொடர்பாக சம்பந்தப்பட்ட துறைகளினால் விசாரணைகள் நடத்தப்பட்டு நிறுவனம் குற்றமற்றதெனக் காணப்படின் மீண்டும் நிறுவனத்தை நடாத்திச் செல்வதற்கு அனுமதி வழங்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

10.

613/ '18

கௌரவ ஆனந்த அளுத்கமகே,— வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) நல்லாட்சி அரசாங்கம் தொடங்கிய நாள் முதல் 2018 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வரை ''உதாகம'' கருத்திட்டத்தின் கீழ்,

(i) ஆரம்பிக்கப்பட்ட கருத்திட்டங்களின் மொத்த எண்ணிக்கை;

(ii) நிர்மாணிக்கப்பட்ட வீடுகளின் மொத்த எண்ணிக்கை;

(iii) செலவிடப்பட்ட முழுத் தொகை;

எவ்வளவென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) அக் கருத்திட்டத்தின் கீழ் மத்திய மாகாணத்தில்,

(i) ஆரம்பிக்கப்பட்டுள்ள வீடமைப்புத் திட்டங்களின் எண்ணிக்கை;

(ii) வீடமைப்புத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ள பிரதேசங்கள்;

(iii) நிர்மாணித்து முடிக்கப்பட்டுள்ள திட்டங்களின் எண்ணிக்கை;

(iv) செலவிடப்பட்டுள்ள முழுத் தொகை;

எவ்வளவென்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) கண்டி மாவட்டத்தில் எதிர்காலத்தில் வீடமைப்புத் திட்டங்களை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும் அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

11.

753/ '19

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) பயங்கரவாதத்தைத் தோற்கடிக்கும் போராட்டத்திற்கு உதவியதன் காரணமாக பாதுகாப்பு வழங்க வேண்டுமென நீதிமன்றக் கட்டளையிட்டுள்ள உண்மையைக் கண்டறிவோர் அமைப்பைச் சேர்ந்த பொறியியலாளர் திரு நிஷாந்த டி. அல்விஸ் என்பவருக்கு இதுவரை பாதுகாப்பு வழங்கப்படாமைக்கான காரணம் யாது என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

12.

777/ '19

கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) "என்றபிரைஸ் ஸ்ரீ லங்கா" வேலைத்திட்டம் நாடளாவிய ரீதியில் செயற்படுத்துகையில் கம்பஹா மாவட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட வட்டி சலுகை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி வேலைத்திட்டத்தை செயற்படுத்துகையில் விசேட கவனம் செலுத்தப்பட்ட துறைகள் யாவையென்பதையும்;

(iii) "என்றபிரைஸ் ஸ்ரீ லங்கா" வேலைத்திட்டத்தை நாடளாவிய ரீதியில் செயற்படுத்துவதற்காக பயன்படுத்தப்பட்டுள்ள அரச மற்றும் தனியார் வங்கிகள் யாவையென்பதையும்;

(iv) மேற்படி திட்டத்தில் கலந்துக்கொள்வதற்கு கடனுக்காக விண்ணப்பித்துள்ள கம்பஹா மாவட்டத்தின் விண்ணப்பதாரர்கள் ஆண் பெண் இரு பாலாருக்கும் ஏற்ப தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(v) 2018 ஆண்டுக்குள் மேற் குறிப்பிட்டுள்ள நபர்களுக்காக விடுவிக்கப்பட்டுள்ள கடன் தொகை எவ்வளவென்பதையும்;

(vi) மேற்படி தேசிய வேலைத்திட்டத்தின் முன்னேற்றம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

13.

794/ '19

கௌரவ ஜயந்த சமரவீர,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு முடிவடையும் போது இலங்கை மகாவலி அதிகார சபைக்கு சொந்தமாக இருந்த வாகனங்களின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி வாகனங்களில் அரசாங்க அமைச்சுகளுக்கு, திணைக்களங்களுக்கு மற்றும் கூட்டுத்தாபனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி வாகனங்களில் விபத்துக்களுக்குள்ளான வாகனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) அவ்வாகனங்களில் திருத்தப்படாத வாகனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி வாகனங்களைப் பாராமரிக்க அதிகாரசபை செலவு செய்துள்ள பணத்தொகை எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

14.

882/ '19

கௌரவ எஸ்.சீ. முத்துகுமாரண,— கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அனுராதபுரம் மாவட்டத்தில் காணப்படும் சிறு குளங்கள், ஆகாயத் தாமரை "ஜப்பான் ஜக்கோனியா" போன்ற நீர்த்தாவரங்களின் ஆக்கிரமிப்பால் துரிதமாக தூர்ந்து வருவதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி நீர்த்தாவரங்களின் ஆக்கிரமிப்பு "கட்டியாவ குளம்" போன்ற நடுத்தர அளவிலான குளங்களுக்கும் பரந்துள்ளதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) மேற்படி நீர்த்தாவரங்களின் ஆக்கிரமிப்பு எதிர்காலத்தில் நெற் செய்கையில் தாக்கத்தை ஏற்படுத்துவதால் அது தேசிய ரீதியான ஒரு பிரச்சினையாக மாறுவதற்கான வாய்ப்பு உள்ளதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iv) மேற்படி நீர்த்தாவரங்களின் ஆக்கிரமிப்பை முழுமையாக நிறுத்துவதற்காக நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

15.

965/ '19

கௌரவ பிமல் ரத்னாயக்க,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அனுராதபுரம், ரத்மல்கஹவெவ, நெலுகொல்லாகடவில் வதியும் ஜனாப் எம்.எம். ஜவுபர் இலங்கை வங்கியின் கஹட்டகஸ்திகிலிய கிளையில் 706863 ஆம் இலக்கமுடைய கணக்கினைத் திறந்து வெளிநாடு சென்று 2006.06.01 தொடக்கம் 2012 டிசம்பர் வரையிலான காலப்பகுதியில் சம்பாதித்த 50 இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான தொகையினை மேற்படி கணக்கில் வரவு வைத்துள்ளார் என்பதையும்;

(ii) 2012 டிசம்பர் மாதம் இலங்கைக்கு வருகை தந்து தனது கணக்கிலுள்ள பணத்தினை மீளப் பெற்றுக்கொள்வதற்காக ஜனாப். ஜவுபர் முயற்சித்த வேளையில் சுமார் 50 இலட்சம் ரூபா பணம் மோசடியான வகையில் வங்கியின் நிதி கவுண்டரில் இருந்தும் தன்னியக்க ரெலர் இயந்திரத்தின் (ATM) மூலமாகவும் மீளப்பெறப்பட்டிருந்ததாகவும் அது தொடர்பாக உடனடியாக வங்கிக்கு அறிவித்து தமது பணத்தினை மீளப் பெற்றுத் தருமாறு கோரிய போதிலும் இதுவரை பணம் மீளச் செலுத்தப்படவில்லையென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) ஜனாப் ஜவுபர் அவர்களுக்கு இப்பணத்தினையும் அதற்கான வட்டியையும் மீளச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(ii) பணம் செலுத்தப்படுமானால் அது எப்போது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

மக்கள் வங்கி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 2.

நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர்,— நீதித்துறைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதி,— 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தின் 60 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும், அச்சட்டத்தின் 61 ஆம் பிரிவின் கீழ், பிரதம நீதியரசரின் ஒருப்பாட்டுடன் நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2019 மார்ச் 26 ஆம் திகதிய 2116/28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.07.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதி அங்கீகரிக்கப்படுமாக.

* 3.

நிதி அமைச்சர்,— நிதிச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2004 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 26 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 22 ஆம் பிரிவின் கீழ் சர்வதேச தொலைத்தொடர்பு இயக்குநர் வரி தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 மே 14 ஆம் திகதிய 2123/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.07.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 4.

நிதி அமைச்சர்,— துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ், துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீடு தொடர்பாக நிதி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2019 மாச்சு 5 ஆம் திகதிய 2113/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.07.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 5.

நிதி அமைச்சர்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் உற்பத்தி வரி தொடர்பாக நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 ஏப்பிறல் 04 ஆம் திகதிய 2117/48 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.07.31 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 6.

வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்,— நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.1),— 2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் 52(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 58 ஆம் பிரிவின் கீழ் தீர்ப்பாளர்களை பதிவுசெய்தல் தொடர்பில் வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 மார்ச் 08 ஆம் திகதிய 2113/63 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.08.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 7.

வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்,— நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.2),— 2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் 53(2) மற்றும் 54(1)(அ) ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 58 ஆம் பிரிவின் கீழ் மேன்முறையீட்டு நடவடிக்கைமுறை தொடர்பில் வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 மார்ச் 28 ஆம் திகதிய 2116/47 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.08.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 8.

வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்,— நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.3),— 2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் 55(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 58 ஆம் பிரிவின் கீழ் தகவற் செயலகம் தொடர்பில் வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 மார்ச் 28 ஆம் திகதிய 2116/48 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.08.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 9.

அபிவிருத்தி உபாயமுறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 29 (2)(ஈ) ஆம் பிரிவின் கீழ் ஏற்றுமதியாளர்களைப் பதிவு செய்வதற்கான திட்ட ஒழுங்குவிதிகள் தொடர்பில் அபிவிருத்தி உபாயமுறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 ஏப்பிரல் 11 ஆம் திகதிய 2118/60 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.08.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 10.

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.1),— இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின்108 (1) உறுப்புரையின் பிரகாரம் கௌரவ உச்ச நீதிமன்ற மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களுக்குச் செலுத்தும் சம்பளம் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுவதோடு, 108(2) ஆம் உறுப்புரையின் மூலம் அந்த நீதிபதிகளை நியமித்த பின்னர் அவர்களுக்குச் செலுத்தவேண்டிய சம்பளம் மற்றும் ஓய்வூதிய உரிமைகளைக் குறைக்கக்கூடாதென ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதனாலும்;

ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பின் 25 ஆம் பிரிவு திருத்தப்பட்ட இல 1190/18 ஆம் இலக்க, 2001.06.28 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் உச்ச நீதிமன்ற நீதியரசர் ஒருவர் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் ஒருவர் ஓய்வுபெறும் போது பெற்றுக்கொண்ட சம்பளத்தின் 90% ஐ ஓய்வூதியமாகப் பெற்றுக்கொள்வதற்கு உரிமையுடைவர் ஆவாரென்பதனாலும்;

உயர் நீதிமன்ற நீதியரசர்களுக்கு தனது விருப்பத்தின் பேரில் அவர்களுக்குரிய மாதாந்த ஓய்வூதியத்தைப் போன்ற 24 மடங்கு தொகையை ஓய்வூதியப் பணிக்கொடையாகப் பெற்றுக்கொள்ள முடியும். எனினும், நீண்ட காலமாக இந்தப் பணிக்கொடை ஓய்வூதியத்திலிருந்து அறவிடப்படாமல் முழுமையான ஓய்வூதியத் தொகையும் மாதாந்தம் செலுத்தப்பட்டுள்ளது. சனாதிபதி அவர்களால் 2019 யூன் 24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு அமைவாக 2019 யூலை 19 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டு இந்தப் பணிக்கொடையை செலுத்துவதற்கு விருப்பம் தெரிவிப்பதன் மீது அந்தப் பணிக்கொடையை மீண்டும் அரசாங்கத்திற்கு அறவிட்டுக்கொள்ளும் முறைக்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளதாக பொருள்கோடல் செய்து, முற்பணத் தொகையாக உச்ச நீதிமன்ற நீதியரசர் ஒருவருக்கு வழங்கப்பட்டுள்ள பணிக்கொடையை 10 வருடங்களுக்குள் அதாவது, 120 மாதாந்த தவணைகளில் மீண்டும் அறவிட்டுக்கொள்வது அரசியலமைப்பின் 108(2) ஆம் உறுப்புரையை மீறியதாக அமையாதென்பதனாலும்;

உச்ச நீதிமன்றத்தின் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதியரசர்களின் ஓய்வூதியக் குறைப்பு அல்லது அதற்கு இடைநேர் விளைவான விடயங்கள் மீது தாக்கம் செலுத்தும் சகல விடயங்கள் தொடர்பிலும் நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் அரசியலமைப்பினால் பாராளுமன்றத்திற்கு வழங்கப்பட்டிருப்பதை சட்டத்துறை தலைமையதிபதி சுட்டிக்காட்டியுள்ளதாதலாலும்;

அவ்வாறே, அண்மையில் நீதிமன்றத் துறைக்கு உயர் சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டிருப்பதும் கருத்திற்கொள்ளப்பட்டுள்ளதனாலும்;

அதற்கிணங்க, உச்ச நீதிமன்ற நீதியரசர்களின் ஓய்வூதியப் பணிக்கொடையை அமுலிலுள்ள சட்டத்திற்கு அமைவாக 120 மாதங்களில் மீண்டும் அறவிடப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றும் தீர்மானிக்கின்றது.

* 11.

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.2),— இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 153 ஆம் உறுப்புரையின் பிரகாரம், சனாதிபதி அவர்களால் அரசியலமைப்புப் பேரவையின் அனுமதியின் கீழ் 2019.04.26 ஆம் திகதியிலிருந்து திரு.டபிள்யூ.பி.சி. விக்கிரமரத்ன அவர்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளதாதலாலும்;

அவரது சம்பளம் 153(2) ஆம் உறுப்புரையின் பிரகாரம் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும் என்பதோடு, திரட்டு நிதியத்தில் பொறுப்பிக்கப்படுதலும் வேண்டுமென்பதனாலும்;

தேசிய சம்பள மற்றும் பதவியணி ஆணைக்குழுவின் பரிந்துரைக்கு அமைய சனாதிபதி அவர்களால் 2019 யூன் 24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கான 2019 யூலை 19 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்திற்கு அமைய கணக்காய்வாளர் தலைமை அதிபதி திரு.டபிள்யூ.பி.சி.விக்கிரமரத்ன அவர்களுக்கு 2019.04.26 ஆம் திகதி முதல் அரச நிர்வாக சுற்றறிக்கை 03/2016 இன் SL-4 சம்பள அளவுத்திட்டத்தின் 7 ஆவது படிமுறையில் அமர்த்தி சம்பளம் வழங்குவதற்கும் அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைய பதவிக்குரிய ஏனைய கொடுப்பனவுகளை செலுத்துவதற்கும் அந்த சம்பள அளவுத் திட்டத்திற்கு அமைய வருடாந்த சம்பள ஏற்றத்தை செலுத்துவதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாதலாலும்;

அதற்கிணங்க, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 153(2) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதி திரு.டபிள்யூ.பி.சி.விக்கிரமரத்ன அவர்களுக்கு திரட்டு நிதியத்தில் பொறுப்பிக்கப்படும் வகையில் மேற்குறிப்பிடப்பட்ட மாதாந்த சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை செலுத்த வேண்டுமென இப்பாராளுமன்றும் தீர்மானிக்கின்றது.

* 12.

கைத்தொழில், வாணிப அலுவல்கள், நீண்டகாலமாக இடம்பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்றம், கூட்டுறவுத்துறை அபிவிருத்தி, தொழில் பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சர்,— பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதி,— 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 36 ஆம் பிரிவின் கீழ், 1988 யூன் 2 ஆம் திகதிய 508/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2012 ஓகஸ்ட் 30 ஆம் திகதிய 1773/36 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை மூலம் இறுதியாகத் திருத்தப்பட்டதுமான ஒழுங்குவிதி, உடனடியாக வலுப்பெறும் வகையில் அதிமேதகு சனாதிபதி அவர்களின் ஒப்புதலுடன் கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2018 சனவரி 24 ஆம் திகதிய 2055/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.07.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 13.

கொழும்பு பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையை பரஸ்பரமற்றமயமாக்கல் சட்டமூலம் — குழு ஆய்நிலை.

* 14.

இலங்கை வர்த்தக மத்தியஸ்த நிலைய (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 15.

பிணையங்கள் பரிவர்த்தனை சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 16.

காலவிதிப்பு (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 17.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 18.

ஸ்ரம வாசனா நிதியம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 19.

சம்பளச் சபைகள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 20.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 21.

வணிகக் கப்பற்றொழில் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 22.

மதுவரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 23.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலை லிமிரெட்டின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் (2015/2016),— 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் 2018.08.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2016.03.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான, களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலை லிமிரெட்டின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(கமத்தொழில் மற்றும் காணி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.07.11 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 24.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— தேசிய பெருந்தோட்டக் கைத்தொழில் முகாமைத்துவ நிறுவனத்தின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் (2016),— 1979 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, தேசிய பெருந்தோட்டக் கைத்தொழில் முகாமைத்துவச் சட்டத்தின் 23 பிரிவின் கீழ், 2018.08.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2016.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான தேசிய பெருந்தோட்டக் கைத்தொழில் முகாமைத்துவ நிறுவனத்தின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(கமத்தொழில் மற்றும் காணி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.05.24 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 25.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகாரசபையின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் (2015),— தேசிய அரசுப் பேரவையின் 1975 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் II பகுதியின் 14-1A ஆம் பிரிவிற்கமைய, 2018.05.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2015.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான, தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகாரசபையின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(கமத்தொழில் மற்றும் காணி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.05.24 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 26.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகாரசபையின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் (2016),— தேசிய அரசுப் பேரவையின் 1975 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் II பகுதியின் 14-1A ஆம் பிரிவிற்கமைய, 2018.09.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2016.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான, தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகாரசபையின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(கமத்தொழில் மற்றும் காணி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.05.24 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 27.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் (2016),— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபைச் சட்டத்தின் 16 ஆம் பிரிவின் பிரகாரம், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் II ஆம் பிரிவிற்கமைய, 2019.06.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2016.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.07.23 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 28.

துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர்,— இலங்கை துறைமுக அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் (2015),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமைய, 2018.01.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2015.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான, இலங்கை துறைமுக அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.06.07 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 29.

துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர்,— இலங்கை துறைமுக அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் (2016),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமைய, 2018.07.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2016.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான, இலங்கை துறைமுக அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.06.07 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 30.

கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சர்,— இலங்கை கமத்தொழில் ஆய்வுக் கொள்கைக்கான சபையின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் (2016),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(2)(C) ஆம் பிரிவிற்கமைய, 2018.06.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2016.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான இலங்கை கமத்தொழில் ஆய்வுக் கொள்கைக்கான சபையின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(கமத்தொழில் மற்றும் காணிகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.07.11 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 31.

கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சர்,— வரையறுக்கப்பட்ட இலங்கை பொஸ்பேட்டு லிமிடட்டின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் (2016/2017),— 2003 யூன் 02 ஆம் திகதிய அரச தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றறிக்கை இல. PED 12, அத்தியாயம் 6.5.3 இன் பிரகாரம், 2018.06.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2017.03.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான வரையறுக்கப்பட்ட இலங்கை பொஸ்பேட்டு லிமிடட்டின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(கமத்தொழில் மற்றும் காணிகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.01.25 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 32.

கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சர்,— அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்ப நிறுவகத்தின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் (2015),— 1972 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க அரச விவசாயக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 2 ஆம் பிரிவிற்கமைய, 2018.08.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2015.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்ப நிறுவகத்தின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(கமத்தொழில் மற்றும் காணிகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.01.25 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 33.

கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சர்,— நெல் சந்தைப்படுத்தும் சபையின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் (2013),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவிற்கமைய, 2018.09.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2013.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான, நெல் சந்தைப்படுத்தும் சபையின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(கமத்தொழில் மற்றும் காணிகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.03.16 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 34.

கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சர்,— கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் (2016),— 1999 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சட்டத்தின் 27 ஆம் பிரிவிற்கமைய, 2018.09.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2016.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(கமத்தொழில் மற்றும் காணிகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.03.16 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 35.

கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சர்,— ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகத்தின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் (2016),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(2)(C) ஆம் பிரிவிற்கமைய, 2018.10.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2016.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகத்தின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(கமத்தொழில் மற்றும் காணிகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.03.16 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 36.

கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சர்,— நெல் சந்தைப்படுத்தும் சபையின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் (2014),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவிற்கமைய, 2019.05.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2014.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான, நெல் சந்தைப்படுத்தும் சபையின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(கமத்தொழில் மற்றும் காணிகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.07.11 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 37.

போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்,— தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் (2015),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(2)(C) ஆம் பிரிவிற்கமைய, 2018.07.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2015.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.06.07 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 38.

போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்,— இலங்கை சிவில் விமானச்சேவைகள் அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் (2015),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(2)(C) ஆம் பிரிவிற்கமைய, 2017.11.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2015.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான இலங்கை சிவில் விமானச்சேவைகள் அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.06.07 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 39.

போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்,— இலங்கை சிவில் விமானச்சேவைகள் அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் (2016),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(2)(C) ஆம் பிரிவிற்கமைய, 2018.10.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2016.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான இலங்கை சிவில் விமானச்சேவைகள் அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.06.07 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 40.

போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்,— இலங்கை போக்குவரத்துச் சபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் (2014),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(2)(C) ஆம் பிரிவிற்கமைய, 2019.01.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2014.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான இலங்கை போக்குவரத்துச் சபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.06.07 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 41.

நிதி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல் (இல.1),— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயமான) 25 ஆம் பிரிவின் கீழ், மதுவரி தொடர்பாக நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2018 சனவரி 18 ஆம் திகதிய 2054/42 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.05.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 04/2018)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 42.

நிதி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல் (இல.2),— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயமான) 32 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் வருடாந்த மதுபான உரிமக் கட்டணம் தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2017 திசெம்பர் 11 ஆம் திகதிய 2049/4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.03.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 1004)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 43.

அரச தொழில் முயற்சிகள், மலைநாட்டு மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சர்,— அரசியலமைப்பின் கீழ் தீர்மானம்,— பாராளுமன்றத்தில் ஆகக்கூடுதலான ஆசனங்களைப் பெற்றுள்ள ஐக்கிய தேசியக் கட்சியினால் தேசிய அரசாங்கமொன்று நிறுவப்பட்டுள்ளதால், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 46 (4) உறுப்புரையின் பிரகாரம் அமைச்சரவை அமைச்சர்களினது எண்ணிக்கை 48 ஐ விட விஞ்சாதவாறு இருத்தல் வேண்டுமெனவும், அமைச்சரவை உறுப்பினர்கள் அல்லாத அமைச்சர்களினதும் பிரதி அமைச்சர்களினதும் எண்ணிக்கை 45 ஐ விட விஞ்சாதவாறு இருத்தல் வேண்டுமெனவும் இப்பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுகின்றது.

* 44.

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழ் தீர்மானம்,— இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104ஆ (5) (அ) உறுப்புரையின் பிரகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்டு 2017 திசெம்பர் 04 ஆம் திகதிய 2048/1 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.01.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான மக்கள் தீர்ப்பொன்றுக்கான அல்லது தேர்தலொன்றுக்கான காலக்கெடுவின் போது இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் பின்பற்றியொழுக வேண்டிய ஒழுக்கநெறிகள் அல்லது வழிகாட்டு நெறிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 45.

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சரும்,— அத்தியாவசிய பொதுமக்கள் சேவை சட்டத்தின் கீழ் கட்டளை,— 1979 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க, அத்தியாவசிய பொதுமக்கள் சேவை சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் பயணிகள் அல்லது பண்டங்களுக்கான அனைத்துப் பொதுப் போக்குவரத்துச் சேவைகளும் அத்தியாவசிய சேவைகள் என பிரகடனப்படுத்தல் தொடர்பில் சனாதிபதியால் பிரகடனப்படுத்தப்பட்டு, 2019 யூலை 27 ஆம் திகதிய 2133/65 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.08.01 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

* 46.

அரசியலமைப்பின் கீழ் பிரேரணை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2016 யூன் 22),— "இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104ஆ (5) (அ) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம், தேர்தல் ஆணைக்குழுவினால் 2016 பெப்புருவரி 25 ஆம் திகதிய 1955/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும், 2016.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான, மக்கள் தீர்ப்பொன்றுக்கான அல்லது தேர்தலொன்றுக்கான காலக்கெடுவின் போது இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் பின்பற்றியொழுக வேண்டிய ஒழுக்கநெறிகள் அல்லது வழிகாட்டு நெறிகள் அங்கீகரிக்கப்படுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

* 47.

பௌத்த அறநிலையங்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 48.

தேரவாத பிக்குமார்கள் கதிகாவத் (பதிவு செய்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

49.

சிறுவர் புனர்வாழ்வு மையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

50.

இலங்கை ஐக்கிய கிறிஸ்தவ நட்புரிமை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

51.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

52.

மொணறாகல மாவட்ட கான்த்தா மஹா சங்கமய (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

53.

லசாலியன் சமூக கல்விச் சேவைகள் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

54.

சர்வதேச பெண்கள் மற்றும் பிள்ளைகளின் உரிமைகள் பேரவை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

55.

ஆலோகா சமூக சேவை மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

56.

த இன்ஸ்டிட்யுட் ஒவ் சேர்டிபைட் பப்ளிக் அக்கவுன்டன்ஸ் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

57.

ஸ்ரீ சாக்கியசிங்காராம விகாரஸ்த கார்யசாதக சங்விதான (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

58.

இலங்கை கட்டிட சேவைகள் பொறியியல் மற்றும் தொழில்நுட்பவியல் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

59.

டாக்டர். எஸ்.எஸ். குணவர்தன சுதேச ஆயுர்வேத அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

60.

மோகன் லங்கா மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

61.

சாயா மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.